**மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2010**

---

## 1 நிதிசார்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மீனவரகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலததிட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப்பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மீனவர்களின் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலததிட்டத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம (இ.க.நி) இல 3 இன்படி குறிப்பிடப்பட்டவாறு வருமானக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வுக் கொள்கை 2009 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்த போதிலும் இ.க.நி இல 10 இன்படி 2010 ஆம் ஆண்டிற்கான புதிய நிலையான சொத்து பெறுமானத் தேய்வுக் கொள்கையின்படி முன்னைய ஆண்டு தொடர்பான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இ.க.நி இல 36 மற்றும் 42 இன் மூலம் வேண்டப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களில் ‘‘எதிர்கால ஓய்வூதிய நலன்கள்’’ இற்காக போதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகளின் கூற்றில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1990 இன் 23 ஆம் இலக்க மீனவர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 20 | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின்படி ஆலோசகர்கள் குழுவில் 06 உத்தியோக ரீதியான உறுப்பினர்கள், மற்றும் 6 நியமன உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்ககாக 10 உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கபப்பட்டிருந்தனர். |
| (ii) பிரிவு 26 | அதிகாரச் சட்டத்தின்படி உறுப்புரிமை காலாவதியானோரிடமிருந்து உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுககக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) அத்தியாயம் 9 இன் 7 ஆம் பந்தி | திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்படாமல் சில உத்தியோகத்தர்களிற்கு ரூபா 293,724 மொத்தமான விசேட படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான திட்டத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 37,889,972 ஆன மிகையுடன் முன்னைய ஆண்டிற்கான ரூபா 63,772,073 ஆன நேரொத்த மிகையை ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 25,882,101 அல்லது 40.58 சதவீதமான குறைவை காட்டுகின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | | **முரண்** |
|---|---|---|---|
| | **2010** | **2009** | **%** |
| | **ரூபா** | **ரூபா** | |
| நிதியத்தின் மொத்த வருமானம் | 62,547,149 | 85,047,690 | (26.46) |
| மொத்தச் செலவினம் | 25,464,243 | 22,067,706 | 15.39 |
| செலவிற்கு மேலான வருமானம் | 37,082,906 | 62,979,984 | (41.12) |
| நிர்வாக மிகை வருமானம் | 807,066 | 792,089 | 1.89 |
| ஆண்டிற்கான ஒட்டுமொத்த மிகை | 37,889,972 | 63,772,073 | (40.58) |

**2.1.2 நிதி நிலைமையின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

கீழே காட்டப்பட்டவாறு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்காக திட்டத்தின் மீனவர் ஓய்வூதிய நிதியத்தின் மீதி ரூபா 243.6 மில்லியன் அல்லது 44.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

| ஆண்டு | நிதியத்தின் மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 2009 | 542.7 |
| 2010 | 299.1 |
| குறைவு | 243.6 |

**2.2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.2.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையானது மீளாய்வாண்டின் போது திட்டத்திற்கு பங்களிப்பாளர்களின் ஆட்சேர்ப்பிற்காக எவ்வித மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கைளையும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுகக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 2000 பங்களிப்பாளர்கள் சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருநந்த போதிலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட உள்ளபடியான பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 1,539 மாத்திரமேயாக இருந்தமையால் எய்தலானது இலக்கின் 77 சதவீதத்ததைக் காட்டுகின்றது. மூன்று மாவட்டங்கள் எந்தவொரு பங்காளரையும் சேர்த்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது சேர்ப்பனவின் நிதி இலக்கு ரூபா 2,073,000 தொகையாக இருந்த போதிலும் உள்படியான பங்களிப்புகள் ரூபா 6,829,603 ஆகும். நிதி முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கான காரணம் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் புதிய பங்காளர்கள் சேர்த்துக்கொள்ளபப்பட்டமை் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வர்டின் போது இரண்டாவது மற்றும் அதற்குப் பின்னரான தவணைப்பண சேகரிப்பின் இலக்கு 37,000 பங்களிப்பினர்களிடமிருந்து ரூபா 5,550,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான உறுப்பினர் சேகரிப்பு 14,237 பங்களிப்பாளர்களிடமிருந்து ரூபா 1,854,985 ஆக மாத்திரமே இருந்தது. இதன்படி, உள்ளபடியான நிதி எய்தல் 33.42 சதவீதமாக மாத்திரமேயாக இருந்ததுடன் உள்ளபடியான சேர்ப்பனவு முன்னேற்றம் 38.47 சதவீதமாக மாத்திரமேயாக இருந்த அதேநேரம் 4 மாவட்டங்கள் எவ்வித தவணைப் பணத்தினையும் சேகரித்திருக்கவில்லை.

(உ) நிதிக் கூற்றுக்களின்படி, ரூபா 22,164,352 தொகையான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த அதேநேரம் மீளாய்வாண்டின் போது பங்களிப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த பங்களிப்புகள் ரூபா 8,684,561 அல்லது 39.18 சதவீதமாகும்.

(ஊ) சபையானது மீளாயய்வாண்டின் போது மீனவர் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்புரிமை பறிமுதல் செய்யயப்பட்ட மற்றும் திட்டத்திற்கு திரும்ப சேர்த்து கொள்ளப்பட்ட அந்தப் பங்களிப்பாளரின் மொத்த எண்ணிக்கையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருககக்கவில்லை.

(எ) சபையானது மீனவர் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்புரிமை பறிமுதல் செய்யயப்பட்ட மற்றும் தவணைப்பண நிலுவை அறிவீட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருககக்கவில்லை.

**2.2.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

ரூபா 5,411,930 தொகையான முதலீட்டு வட்டிப் பெறுவனவு தொடர்பான தாமதம் சம்பந்தமாக வங்கியொன்றிற்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கு தொடர்பில் 1996 இலிருந்து சபையால் ரூபா 1,075,875 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. நிதி மன்றம் 2003 திசெம்பர 10 இல் சபைக்கு சாதகமான தீர்வை வழங்கியிருந்தது. வங்கியானது தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தது. நீதி மன்ற வழக்குத் தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நோக்கங்களை எய்துதல்

(ஆ) மீனவர் நலக் கொடுப்பனவுகள்

(இ) பெறவேண்டிய காசு

(ஈ) 2 ஆவது மற்றும் பிந்திய தவணைப் பண அறவீடு

(உ) ஆலோசனைக் குழுக்களின் செயற்பாடுகள்